
# அப்துல்கலாம் உரைகளும், நிகழ்வுகளும் நூல் வெளியீட்டு விழா




மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் அப்துல்கலாம் அவர்களின் உரைகளும், நிகழ்வுகளும் என்ற நூலை முனைவர் மா.துரைராசன், முனைவர் ப.ராகவன், முனைவர் ரா.ஜெயபால் ஆகியோர் உருவாக்கியுள்ளனர். இதன் வெளியீட்டு விழா திருச்சி தேசியக்கல்லூரியில் கடந்த 14ம் தேதி சிறப்பாக நடைபெற்றது. தேசியக்கல்லூரியின் நூலகர் முனைவர் ப.ராகவன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் கு.அன்பரசு தலைமை தாங்கினார். அவர் பேசும்போது, இம்முயற்சியைபாராட்டியதோடு இந்தியாவின் கடைக்கோடியில் பிறந்து உலகையே வலம் வந்த ஏவுகணை நாயகர் டாக்டர் அப்துல் கலாம் என போற்றினார். முதல் பிரதியை கல்லூரி செயலர் கா.இரகுநாதன் வெளியிட, பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகர் முனைவர் சு.சீனிவாசராகவன் பெற்றுக்கொண்டார். கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச.ஈஸ்வரன் நூலை திறனாய்வு செய்து உரை நிகழ்த்தினார். பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் முனைவர் பேராசிரியர் முத்துராமகிருஷ்ணன், ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் பேராசிரியர் இளவரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தூய வளனார் கல்லூரி நூலகர் முனைவர் மா.துரைராசன் ஏற்புரை நிகழ்த்தினார். கோவை ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கலைக்கல்லூரி நூலகர் முனைவர் ரா.ஜெயபால்